அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 05/2017

எனது இலக்கம்: EST-5/3/17/-VI
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு – 07.

2017.09.25

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச சேவையில் ஒரு சேவையில் அல்லது பதவியொன்றில் இருந்து அரச சேவையின் மற்றொரு சேவைக்கு அல்லது பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களின் சம்பளத்தினை தயாரித்தல்**

அரச சேவையில் ஒரு சேவையில் அல்லது பதவியொன்றில் இருந்து மற்றொரு சேவைக்கு அல்லது பதவியொன்றுக்கு நியமனம் பெறும் அலுவலர்களின் சம்பளத்தினை தயாரிக்கும் போது பல்வேறு பிரச்சினைகள் நிலவுவதாக என்னிடம் முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப அவதானம் செலுத்தப்பட்டது.

02. அதற்கிணங்க, அரச சேவையில் குறித்த சேவையொன்றுக்கு அல்லது பதவிக்கு உரித்தான சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஆட்சேர்ப்பு முறைமைக்கு இணங்க மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அடிப்படையில் குறித்த ஆட்சேர்ப்பு விகிதாசாரம் ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் போது மற்றும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தின் கீழ் அச் சேவைக்கு அல்லது பதவிக்கு நியமிப்பதற்கு உரிய பெயர் குறிப்பிடப்பட்ட மற்றொரு சேவையொன்றின் / பதவியில் இருந்து நியமனம் கிடைக்கப்பெறும் அலுவலரொருவரின் சம்பளத்தினை தயாரிக்கும் போது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை உரித்துடையதாகக் கொண்டு சம்பளம் தயாரிக்கப்படுவதோடு அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படாத ஆட்சேர்ப்பொன்றின் அடிப்படையில் சேவை / பதவியொன்றிற்கு நியமனம் பெறும் போது அரச சேவையின் எந்தவொரு சேவை அல்லது பதவியொன்றில் கடமையாற்றிய அலுவலரொருவரின் சம்பளம் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படல் வேண்டும். மேலும், தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சம்பளத்தினைத் தயாரிக்கும் போது குறித்த ஒரு அலுவலர் முன்னைய பதவியில் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருந்த சம்பளத்தினை விடக் குறைந்த சம்பளப் படிமுறைக்கு உரித்துடையதாக முடியும், ஆனால் அது சம்பள முரண்பாடாகக் கருதப்பட மாட்டாது.

03. இவ் ஏற்பாடுகள் தொடர்பாக தங்களின் கீழ் காணப்படும் சகல அலுவலர்களுக்கும் தெரிவிக்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்: ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு